## மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,

## கும்முடிப்பூண்டி

| | | |
|---|---|---|
| வழக்கு எண்: C.C. 66 / 2023 | காவல் நிலையம்– பாதிரிவேடு | |
| பெயர் : சந்திரன் | அ.சா.5 | நாள் : 10.09.2025 |

அரசு தரப்பு சாட்சியான அ.சா.5 என்பவரின் வாக்குமூலம் 1969ஆம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி திரு.S.தமிழரசன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சந்திரன் | தாலுக்கா | : | கும்மிடிப்பூண்டி |
| தந்தை பெயர் | : | ஏசுகான் | தொழில் | : | கூலி |
| கிராமம் | : | கயடை | வயது | : | 55 |

( எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் கயடை கிராமத்தில் பூர்விகமாக வசித்து வருகிறேன். நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள எந்த சாட்சி கையெழுத்தும் என்னுடையது அல்ல.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதவேண்டும் என்று அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஆவணங்களை பரிசிலித்து அனுமதி வழங்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 20.07.2018ம தேதி காலை 11 மணியளவில் பொம்மாச்சி குளம் அருகே நானும் எங்கள் ஊரை சேர்ந்த ரவி என்பவரும் நின்று கொண்டிருந்தோம் என்றும், அப்போது பாதிரிவேடு காவல் நிலைய உதவிஆய்வாளர் மேற்படி இடத்திற்கு வந்தார் என்றும், அப்போது எங்கள் முன்னிலையில் மேற்படி உதவி ஆய்வாளர் மேற்படி காவல் நிலைய குற்ற எண். 308/2018 சம்பந்தமாக மேற்படி சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தார் என்றும், அந்த தயார் செய்யப்பட்ட பார்வை மகசரில் நானும் ரவியும் போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்சமயம் எதிரிக்கு சாதகமாக இவ்வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது என்றும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல.

**எதிரி  தரப்பில் குறுக்கு  விசாரணை**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

**(மறு விசாரணை இல்லை)**

ஓம்/– சந்திரன்

திறந்த நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் முன்னிலையில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

R. Senthil Kumar, M.A., B.L.,

Digitally signed by R. Senthil Kumar, M.A., B.L.,
Date: 2025.09.10 13:03:15 +0530

மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
கும்முடிப்பூண்டி